மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அந்தக் கோயிலே இப்பொழுதுதான் எண்டோமெண்ட் கண்ட்ரோலிலே எடுக்கப் பட்டிருக்கிறது. அதற்கு முன்னாலே ஏறத்தாழ 45 ஏக்கர் 98 சென்ட் சொத்து அங்கே இருந்ததாக இருக்கிறது. அந்தச் சொத்துக்கள் பராதீனம் செய்யப்பட்டுவிட்டன என்ற காரணத்தினாலே அந்தக் கோயிலை எண்டோமெண்ட் கண்ட்ரோலுக்குக் கொண்டுவந்திருக் கிறார்கள். இனிமேல்தான் வருமானத்தைப் பார்க்கவேண்டும். அந்தக் குருக்கள்தான் வருமானம் இல்லையென்றும் அதனால் பூசை செய்யமுடியவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். இனிமேல் தான் அதனுடைய நிலமைகளையெல்லாம் பார்க்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்சி வித்தியாசம் இல்லாமல் போடப்படுமா என்று கேட்டார்கள். கட்சி வித்தியாசம் எல்லாம் பார்த்துக் கொண்டு போடுவதாகத் தெரியவில்லை. நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு அப்படி இருந்திருக்கலாம், ஆகவேதான் அப்படிச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். இப்பொழுது அப்படியில்லை. இருந்தபோதிலும் அது கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Administration of Trusts

* 78 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to appoint a High Court Judge to enquire into the administration of Trusts; and

(*b*)) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம் : முன்பு ஒரு முறை கேள்வி நேரத்திலே இந்த டிரஸ்டிகள் விவகாரத்திலே நல்ல ஒரு குழுவையமைத்து எந்த எந்த டிரஸ்டுகள் எப்படி நடக்கின்றன இந்த நாட்டிலே, அது பற்றிக் கவனிக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்களே அந்த வாக்குறுதிப்படியாயினும் தமிழ் மாநிலத் திலே எல்லா டிரஸ்டுகளும் நல்ல முறையிலே நடக்கின்றனவா அல்லது தவறான முறையிலே நடக்கின்றனவா என்று ஆராய் வதற்காக இனிமேலாவது ஒரு குழுவை அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

மரம் வளர்ப்புத் திட்டம்

* 79 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

ஆறு, கால்வாய், ஏரிக்கரைகளில் மரம் வளர்ப்புத் திட்டத்தை அமுல் படுத்த 1970-71ம் ஆண்டில் தமிழ்நாடு அரசு எந்த வகை யில் செயல்படுத்த உள்ளது?